மழைநீர் சேமிப்போம்""                                        பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் ""

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 12.04.2023

## நகர்மன்ற சிறப்புக் கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு, சுபகிருது வருடம், பங்குனி மாதம் 30-ம்நாள் 13.04.2023-ம் தேதி வியாழக் கிழமை காலை 11. 00 மணிக்கு நகர்மன்ற கூட்டரங்கில் நகர்மன்ற சிறப்புக் கூட்டம் நடைபெறும். அது சமயம் நகர்மன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(ஒம்).பா.ரேணுப்பிரியா,
நகர்மன்ற தலைவர்,
தேனி -அல்லிநகரம் நகராட்சி.

**பொருள் 01-**

தேனி - அல்லிநகரம் நகராட்சி 1964-ம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக உருவாக்கப்பட்டது. அரசாணை எண் : 194 நாள் : 10-02-1972-ன் படி இரண்டாம் நிலை நகராட்சியாகவும், அரசாணை எண்: 851 நாள் : 09-05-1983-ன் படி முதல் நிலை நகராட்சியாகவும்,பின்னர் அரசாணை எண்:238 நாள்: 02-12-2008-ன்படி தேர்வு நிலை நகராட்சியாகவும் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி 33 வார்டுகளுடன் 22.23 சதுர கிலோமீட்டர் பரப்பளவு கொண்டதாக உள்ளது. 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 94,453 பொது மக்கள் வசித்து வந்தனர். தற்போது உத்தேசமாக 1,10,000 மக்கள் வசித்து வருகின்றனர்.

தேனி - அல்லிநகரம் நகராட்சி மாவட்ட தலைநகராக உள்ளதாலும், பல்வேறு அரசு துறை அலுவலகங்கள் மற்றும் நகர் பகுதியில் பல்வேறு தொழில் மற்றும் வணிக நிறுவனங்கள் அதிக அளவில் உள்ளதாலும் இந்நகருக்கு தினசரி சுமார் 50,000-க்கு மேற்பட்ட பொது மக்கள் வந்து செல்கின்றனர். நகரை சுற்றிலும் புதிய குடியிருப்புகள் உருவாகி வருகிறது. மேலும் 2022-23-ம் நிதியாண்டில் நகராட்சியின் மொத்த ஆண்டு வருமானம் ரூ: 36.53 கோடி ஆகும். இந்நகரில் உள்ள

மக்கள் தொகை மற்றும் ஆண்டு வருமானம் ஆகியவை சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்த தேவையான தகுதிகளை பெற்றுள்ளது.

இந்நிலையில் நகரமயமாக்கலை கருத்தில்கொண்டும் மக்கள் தொகை பெருக்கத்திற்கேற்ப அடிப்படை கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட ஏதுவாக 2023-24-ம் ஆண்டு சட்டமன்ற கூட்டத் தொடரில் மாண்புமிகு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் அவர்களால் தேனி - அல்லிநகரம் நகராட்சியினை தேர்வு நிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்திட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அரசாணை எண்: 113 நாள்: 30-08-2019-ன் படி சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்துவதற்கான அனைத்து வசதிகள் மற்றும் நிதி ஆதாரம் உள்ளதால் பெருகிவரும் மக்கள் தொகை மற்றும் நகரின் வளர்ச்சியினை கருத்தில் கொண்டு தேனி - அல்லிநகரம் நகராட்சியினை தேர்வு நிலை நகராட்சியிலிருந்து சிறப்பு நிலை நகராட்சியாக தரம் உயர்த்திட அரசிற்கு உரிய கருத்துரு அனுப்பிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:

அ) மன்றம் அனுமதிக்கலாம். (**ந.க.எண் : 1220 / 2023 / சி-1**)

**தீர்மான எண்**: 402
**தீர்மானம்**: அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்).பா.ரேணுப்பிரியா,
நகர்மன்றத் தலைவர்,
தேனி - அல்லிநகரம் நகராட்சி

//உண்மை நகல் //

ஆணையாளர்,
தேனி-அல்லிநகரம் நகராட்சி